முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1142

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.11.2022**, திங்கட்கிழமை

1. பரபிரம்ம ஆனந்த சதாசிவ குருவே
பரமானந்த ஞான யோக குருவே
வரம் பெற்று என் சக்தியாக வாழுகின்ற
வள்ளலே சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 28 ம் நாள் 14.11.2022 திங்கட்கிழமை)
வரமென அரங்கன் சக்தி மூலமே
வையகத்தில் ஞான ஆட்சிக்காலம் உதயமாகும்
3. ஆகுகின்ற அற்புதத்தை ஆறுமுகன் யான்
ஆற்றல்பட சூட்சுமமாய் நடத்தி வருகின்றேன்
மாறுதலை உலகினில் செய்து இனிதே
மகான் அரங்கன் ஆசி பெற்றவர்க்கே ஆளுமை வாய்ப்பு
4. வாய்ப்பு தந்து உலகில் அற்புதம் நடத்துவேன்
வள்ளல் தன்மை கொண்ட அரங்கன் தொண்டர்களுக்கே
வையகத்தில் மாற்றம் தரும் சக்தியை வழங்கி
வழங்கியே ஆறுமுகன் யான் வல்லமைபட அரங்கன் ஆசியாக உலகுக்கு மாற்றம் தருவேன்
5. தருகவே அரங்கனின் தர்மவழியை
மறவாது எவர் ஏற்று மண்ணுலகில் தொடர் சேவை ஆற்றுகின்றாரோ
ஆற்றுகின்ற மக்களெல்லாம் உலகினில் ஞானிகளாகி
அரங்கனால் அவதாரத்தின் இந்த அற்புதத்தை
6. அறிந்து உணர்ந்து உலகிலே
அரங்கன் வழிவழி ஞானியர் கூட்டங்களாக மாறி அற்புதம் பெறுவர்
ஆகவே அரங்கனை நோக்கி உலகோர் வர
அதிசயம் சடுதி கண்டு ஆனந்த வாழ்வு பெறுவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–